Royal College of Anaesthetists

## மயக்க மருந்து வழங்கல் – ஆபத்துகளும் மற்றும் பக்க விளைவுகளும்

# ஒரு பொது மயக்க மருந்துக்குப் பிறகு குழப்பமடைவது (சித்தப்பிரமை)

## இந்தச் சிற்றேட்டைப் பற்றி

இந்தச் சிற்றேடு, ஒரு பொது மயக்கமருந்து மற்றும் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு **குழப்பமடையும்** ஆபத்தைப் பற்றி சொல்கிறது. இது 'சித்தப்பிரமை' எனப்படுகிறது. இது சித்தப்பிரமைக்கான காரணங்கள் மற்றும் அதைப்பற்றி என்ன செய்ய முடியும் என்பதையும் விளக்குகிறது.

பொது மயக்க மருந்துகள் என்பவை ஆழமான தூக்கத்தைப் போன்ற நிலையைக் கொடுக்கும் மருந்துகளாகும். சில அறுவைச் சிகிச்சைகளுக்கும் செயல்முறைகளுக்கும் இவை தேவைப்படுகின்றன. ஒரு பொது உணர்ச்சி நீக்கி வழங்கலின் போது நீங்கள் மயக்க நிலையில் இருப்பீர்கள், மற்றும் எதையும் உணரமாட்டீர்கள்.

வெவ்வேறு வகை பொது மயக்கமருந்துகள் பற்றி நீங்கள் வெவ்வேறு மொழிகளில் பின்வரும் எங்கள் இணையத் தளத்தில் படிக்கலாம்: www.rcoa.ac.uk/patientinfo/translations#languages.

## சித்தப்பிரமை என்றால் என்ன?

சித்தப்பிரமை என்பது மூளையின் செயல்பாட்டில் ஒரு திடீர் மாற்றத்தினால் ஒருவரை குழப்பத்திற்கும் திசைமாறுதலுக்கும் உள்ளாக்குகிறது. எடுத்துக்காட்டாக, இது ஒரு நோய்த்தொற்றின் போது அல்லது அறுவைச் சிகிச்சை மற்றும் பொது மயக்க மருந்துக்குப் பிறகு ஏற்படலாம்.

அறிகுறிகள் நபருக்கு நபர் பெரிதும் மாறுபடலாம். சிலருக்கு, அறிகுறிகள் கடுமையானதாகவும் மற்றும் பல மாதங்களுக்கும் நீடிக்கக் கூடும். மற்றவர்களுக்கு விளைவுகள் நீண்ட காலம் நீடிக்காது. சித்தப்பிரமை பல்வேறு விஷயங்களால் ஏற்படுகிறது மற்றும் அதைத் தடுப்பது கடினமாக இருக்கலாம். அது நிகழ்ந்தால், அதற்கு சிகிச்சையளிக்க சுகாதார வல்லுநர்கள் செய்யக்கூடிய விஷயங்கள் உள்ளன.


## இது நிகழ எவ்வளவு வாய்ப்புள்ளது?

சித்தப்பிரமை ஏற்படும் ஆபத்து ஒவ்வொருவருக்கும், பல்வேறு காரணிகளின் அடிப்படையில் வேறுபடுகிறது. பின்வரும் காரணங்களால் ஆபத்து அதிகமாகலாம்:

- நீங்கள் 60 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால்; வயது அதிகரிக்கும் போது, சித்தப்பிரமை ஏற்படும் ஆபத்தும் அதிகரிக்கும்
- அறுவைச் சிகிச்சை நடைபெறும் நேரத்தில் உங்கள் உடல் நலம் குறைவாக உள்ளது
- அறுவை சிகிச்சையின் போது உங்கள் அறிவாற்றல் திறன் (சிந்தனை, நினைவில் வைத்தல், பகுத்தறிதல் போன்றவை) பலவீனமடைகிறது
- உங்களுக்கு நினைவழிவு அல்லது உங்கள் மூளை செயல்பாட்டை பாதிக்கும் ஒரு நிலை உள்ளது

- உங்களுக்கு ஒரு மனநலப் பிரச்சினை இருக்கிறது
- நீங்கள் பல்வேறு மருத்துவ நிலைகளுக்கு நிறைய மருந்துகளை எடுத்துக் கொள்கிறீர்கள்
- நீங்கள் அதிக அளவில் மதுபானம் அருந்துகிறீர்கள்
- நீங்கள் பொழுதுபோக்கு போதை மருந்துகளை எடுத்துக் கொள்கிறீர்கள்
- நடப்பதிலும் நடமாடுவதிலும் உங்களுக்கு சிரமங்கள் உள்ளன
- உங்களுக்குப் பார்வை அல்லது காதுகேட்கும் திறன் குறைவாக உள்ளது
- உங்களுக்கு அவசர அறுவைச் சிகிச்சை தேவை.

ஒவ்வொரு 100 பேரில்



**10–50 பேருக்கு சித்தப்பிரமை இருந்தது**

**50 முதல் 90 நபர்களுக்கு சித்தப்பிரமை ஏற்படவில்லை**

சில வகையான அறுவைச் சிகிச்சைகள் சித்தப்பிரமை உருவாகும் ஆபத்தை அதிகரிக்கவும்கூட செய்யலாம். கீழே உள்ள அட்டவணை சில அறுவை சிகிச்சைகளுக்குப் பிறகு எத்தனை பேருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டது என்பதை காட்டுகிறது:

| **அறுவைச் சிகிச்சை** | 100 பேரில் |
|---|---|
| சிறுநீரகவியலில் (சிறுநீர்ப்பை) | சுமார் 5 பேருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டது |
| எலும்பியலில் (முழங்கால் போன்ற மூட்டுகளில் செய்யப்படும்) | சுமார் 12 பேருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டது |
| தலை மற்றும் கழுத்து | சுமார் 17 பேருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டது |
| வயிற்றுப்பகுதியில் (வயிறு) | சுமார் 28 பேருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டது |
| சுற்றுப்புற இரத்தக் குழாய்கள் (சிறிய குழாய்கள்/இரத்த ஓட்டம்) | சுமார் 39 பேருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டது |
| வயிற்றுப் பகுதியில் உள்ள பெரும் இரத்தக் குழாய் வீக்கம் (பெரிய தமனி /இரத்தக் குழாய்) | சுமார் 43 பேருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டது |
| இதயக் குழாய் மாற்றுவழி அறுவைச் சிகிச்சை | சுமார் 44 பேருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டது |
| இடுப்பு எலும்பு முறிவு | சுமார் 50 பேருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டது |

இந்த எண்கள் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களைச் சேர்ந்த ஆய்வுகளில் இருந்து பெறப்பட்டவை. நாங்கள் இந்த எண்களை எங்கிருந்து பெற்றோம் என்பதை நீங்கள் எங்கள் இணையத் தளத்தில் காணலாம்: www.rcoa.ac.uk/patientinfo/risks/evidence.

நீங்கள் திட்டமிடப்பட்ட அறுவை சிகிச்சை (அவசரமற்றது) செய்யவிருந்தால், அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டிற்காக நீங்கள் அழைக்கப்படுவீர்கள். அந்த மதிப்பீட்டின்போது, சுகாதாரப் பராமரிப்புக் குழு உங்கள் உடல்நிலையைப் பரிசோதித்து, உங்களுக்கு சித்தப்பிரமை ஏற்படுவதற்கான ஆபத்தை மதிப்பிடும். அவர்கள் உங்களை ஒரு முதியோர் நிபுணரிடம் (வயது சார்ந்த மருத்துவ நிலைகளில் சிறப்பு பெற்ற மருத்துவர்) அல்லது ஒரு சிறப்பு மயக்கவியல் நிபுணரிடம் அனுப்பலாம். இது உங்கள் மருத்துவ பராமரிப்பை மேம்படுத்தவும், சித்தப்பிரமை ஏற்படும் ஆபத்தைக் குறைக்கவும் உதவும்.

## சித்தப்பிரமை, நினைவழிவு இரண்டும் ஒரே மாதிரியானவையா?

சித்தப்பிரமை என்பது நினைவழிவு அல்ல, என்றாலும் அறிகுறிகள் ஒரே மாதிரியாக இருக்கலாம். நினைவழிவு என்பது படிப்படியாய் அதிகரிக்கும் மூளை நோயாகும். எனினும், நினைவழிவு கொண்டவர்களுக்கு சித்தப்பிரமை ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

சில சந்தர்ப்பங்களில், கண்டறியப்படாத நினைவழிவு நோயின் அறிகுறிகள் அறுவை சிகிச்சைக்குப் பிறகு தோன்றத் தொடங்குகின்றன. இந்த நிலையில் உள்ள சிலர், வழக்கத்தை விட நீண்ட காலத்திற்கு தங்கள் அறிவாற்றல் திறன் மோசமடைவதை தொடர்ந்து அனுபவிக்கலாம் அல்லது அறுவைச் சிகிச்சைக்கு முன் இருந்த நிலைக்கு திரும்ப முடியாமல் போகலாம். இந்த சூழ்நிலைகளில், அவர்களுக்கு ஒரு பொது மருத்துவர் அல்லது நினைவாற்றல் மருத்துவமனையின் உதவி தேவைப்படலாம்.

## சித்தப்பிரமையை எப்படி உணரலாம்?

சித்தப்பிரமை ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாக உணரப்படும். சிலர் பதட்டமாக உணர்கிறார்கள். வேறு சிலருக்கு அமைதி ஏற்பட்டு அதிகத் தூக்கக் கலக்கம் ஏற்படுகிறது. அறிகுறிகள் மாலையிலும் இரவிலும் மோசமடைகின்றன.

அறிகுறிகளில் பின்வருவன அடங்கும்:

- உங்கள் சொந்தப் பெயர் என்னவென்றோ அல்லது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்றோ தெரியாமல் இருப்பது
- உங்களுக்கு என்ன நடந்தது என்றும், நீங்கள் ஏன் மருத்துவமனையில் இருக்கிறீர்கள் என்றும் தெரியாமல் இருப்பது
- குடும்ப உறுப்பினர்களை அடையாளம் காண முடியாத நிலை
- பகலில் தூங்கி இரவில் விழித்திருக்கும் நிலை
- கண்ணீர் வருதல், பதட்டம், கோபம் அல்லது ஆக்கிரமிப்பு போன்ற உணர்ச்சி மாற்றங்கள்
- தொடர்பற்ற முறையில் பேசுவது, கூச்சலிடுவது மற்றும் திட்டுவது
- படுக்கையிலிருந்து இறங்க முயற்சிப்பது
- மூட ஐயத்திற்கு ஆளாகி மக்கள் தனக்குத் தீங்கு செய்ய முயற்சிக்கிறார்கள் என்று நினைப்பது
- இல்லாதவற்றைப் பார்க்கவும் கேட்கவும் செய்வது (மாயத் தோற்றங்கள்).

சித்தப்பிரமை பயமுறுத்தக்கூடியதாக இருக்கலாம், அது பாதிக்கப்பட்டவருக்கு மட்டுமன்றி, அவர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் கூட. இது உங்களுக்கு ஏற்பட்டால், உங்கள் மருத்துவமனை குழு நீங்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்து, தேவையான ஆதரவை வழங்கும்.

## சித்தப்பிரமைக்கு எவ்வாறு சிகிச்சையளிக்கப்படுகிறது?

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு உங்களுக்கு சித்தப்பிரமை ஏற்பட்டால், உங்கள் மருத்துவமனை குழு அதற்கான காரணங்களை கண்டறிந்து, அவற்றை விரைவாக நேர்கொள்வார்கள். இதில் பின்வருவன அடங்கும்:

- எந்தவொரு நோய்த்தொற்றுக்கும் சிகிச்சையளிக்க நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உங்களுக்கு வழங்குதல்
- எந்த வலிக்கும் சிகிச்சையளித்தல்
- சித்தப்பிரமை ஏற்படுத்தக்கூடிய மருந்துகளை மாற்றி சரி செய்தல்
- உங்களுக்கு கூடுதல் திரவங்களை அளித்தல்
- மலச்சிக்கலுக்கு சிகிச்சையளிக்க உதவுதல் (குடல் அசைவுகளில் சிரமம்).

சித்தப்பிரமை மிகவும் கடுமையானதாக இருந்து, உங்களுக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கும் ஆபத்து இருந்தால், உங்களுக்கு ஒரு அமைதியூட்டி கொடுக்கப்படலாம் – உங்களை அமைதிப்படுத்த ஒரு மருந்து.

உங்களை சித்தப்பிரமையிலிருந்து மீளச் செய்யவும், குழப்பம் குறையவும் உங்கள் மருத்துவமனை குழு கூடுதல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

உதாரணமாக, அவர்கள் செய்யக்கூடியவை:

- ஒரு வழக்கமான அன்றாட நடைமுறையை, தெளிவாகத் தெரியும் கடிகாரத்தை, மற்றும் இயற்கை வெளிச்சத்தை வழங்குதல்
- மூளையைத் தூண்டும் செயல்பாடுகளை வழங்குதல், உதாரணமாக புதிர்கள் மற்றும் வாசிப்பு
- உங்களை உங்கள் கண்ணாடி மற்றும் காது கேட்கும் கருவிகளை அணிய ஊக்குவித்தல்
- குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் முடிந்தவரை அதிகமாக வருவதற்கு அனுமதி வழங்குதல்
- சாத்தியமான போதெல்லாம், அதே மருத்துவ பணியாளர்களை உங்களைப் பராமரிக்கச் செய்வது
- சாத்தியமான போதெல்லாம், உங்களை நன்றாகத் தூங்க மற்றும் உங்கள் தூக்கத்தைக் கலைக்காமலும் இருக்க உதவுவது
- முடிந்தால், அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு படுக்கையிலிருந்து எழுந்து நடக்க உங்களை ஊக்குவித்தல்
- தேவையில்லாத குழாய்கள் மற்றும் சொட்டு மருந்துகளைக் கூடிய விரைவில் அகற்றுவது
- உங்களை சாப்பிட, குடிக்க ஊக்குவித்து மற்றும் உங்களுக்கு உதவுமானால் ஒரு உணவியல் நிபுணரிடம் பரிந்துரைப்பார்கள்.

மருத்துவமனைக்கு வரும்போது உங்கள் மூக்குக்கண்ணாடி, காது கேட்க உதவும் கருவி, மருந்துகள் மற்றும் உங்களுக்கு நலம் பெற உதவக்கூடிய எந்த ஒரு பொருளையும் எடுத்துக் கொண்டு வருவதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

## நான் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய பிறகு எது உதவும்?

எந்த வயதினரானாலும், எந்த அறுவை சிகிச்சை செய்திருந்தாலும் மருத்துவமனையிலிருந்து வெளியேறிய பிறகு ஒரு பொறுப்பான பெரியவர் வீட்டிற்கு அழைத்துச் சென்று 24 மணி நேரம் அவர்களுடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். நீங்கள் போதுமான அளவு நலமாக இருந்தால், அறுவைச் சிகிச்சை நடந்த அதே நாளில் நீங்கள் வீட்டிற்கு அனுப்பப்படுவீர்கள். நீங்கள் விரைவாக உங்கள் பழக்கமான சூழலுக்கு திரும்பினால், சித்தப்பிரமை உண்டாகும் ஆபத்து குறையும்.

வீட்டிற்கு வந்த பிறகு, நீங்கள் நலம் பெறவும் சித்தப்பிரமை ஆபத்து ஏற்படாமல் இருக்க உதவும் சில செயல்களைச் செய்யலாம், உதாரணமாக:

- வழக்கமான பழக்கத்தைப் பின்பற்றி மற்றும் ஒவ்வொரு நாளும் இலக்குகளை வைத்துக் கொள்ள முயலுங்கள்
- உங்கள் கண்ணாடி மற்றும்  காதுகேட்கும் கருவியை அணிந்து கொள்ளுங்கள்
- உங்கள் மூளையை சுறுசுறுப்பாக வைத்திருங்கள் (குறுக்கெழுத்துப் புதிர்கள் போடுதல் அல்லது படித்தல் )
- உங்கள் வலிக்கு மருந்து எடுத்துக் கொள்வதில் மருத்துவர்களின் அறிவுரையைப் பின்பற்றுங்கள்
- மருத்துவர்கள் சொன்ன எந்த ஒரு உடற்பயிற்சிகளையும் செய்யுங்கள்
- குடும்பத்தினர் நண்பர்கள் உங்களுக்கு ஆதரவு அளிக்க ஏற்பாடு செய்து அவர்களுடன் அடிக்கடி தொடர்பில் இருங்கள்.

## என் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் என்ன செய்யமுடியும்?

மயக்க மருந்து அல்லது அறுவைச் சிகிச்சையால் உங்களுக்கு சித்தப்பிரமை ஏற்படும் ஆபத்து இருக்கலாம் என்று உங்களுக்குக் கூறப்பட்டிருந்தால், நீங்கள் அதை உங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். இந்த கையேட்டை நீங்கள் அவர்களுக்கு காட்டுங்கள், அதனால் அவர்கள் உங்களுக்கு எப்படி உதவலாம் மற்றும் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு என்ன நடக்கும் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

சித்தப்பிரமை பற்றி மேலும் தெரிந்து கொள்ள, ஸ்காட்டிஷ் இன்டர்காலேஜியேட் கைட்லைன்ஸ் நெட்வொர்க் வெளியிட்ட இந்த கையேட்டை பார்க்கலாம் மற்றும் இது மயக்கம் அனுபவித்தவர்களுக்கும், அவர்களை கவனிக்கும் குடும்பத்தினருக்கும் உதவியாக இருக்கும்:www.sign.ac.uk/media/1144/pat157.pdf.

## எப்போது உதவியை நாடவேண்டும்

வீட்டில் மீட்டெழத் தொடங்கிய பிறகு திடீரென சித்தப்பிரமை போன்ற அறிகுறிகள் உண்டானால், அது நோய்த்தொற்றின் அடையாளமாக இருக்கலாம். நீங்கள் அல்லது உங்களை கவனிக்கும் மக்கள் உடனே மருத்துவமனையில் அல்லது ஒரு பொது மருத்துவரிடம் ஆலோசனை கேட்க வேண்டும்.

## பொறுப்பு துறப்பு

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேர்வுகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொருப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களிடம் சொல்லுங்கள்

இந்த காகிதத்துண்டு பிரசுரத்தை விருத்தி செய்ய ஆலோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

இதுபற்றி உங்களுக்கு ஏதேனும் கருத்துகள் இருந்தால், தயவுசெய்து அவற்றை இந்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்: patientinformation@rcoa.ac.uk

**Royal College of Anaesthetists**
சர்ச்சில் இல்லம், 35 ரெட் லயன் சதுக்கம், லண்டன் WC1R 4SG

# www.rcoa.ac.uk

ஆறாம் பதிப்பு, நவம்பர் 2024

இந்த சிற்றேடு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மதிப்பாய்வு செய்யப்படும்.

**© 2024 Royal College of Anaesthetists**
நோயாளித் தகவல் தாள்களை உருவாக்கும் நோக்கத்துக்காக இந்தச் சிற்றேட்டை நகல் எடுத்துக்கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், சரியான ஒப்புகை வழங்கப்பட வேண்டும், வணிகச் சின்னங்கள், அடையாளக் குறியிடுதல், படங்கள் மற்றும் படவுருக்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.